விலை ரூபா 5.00

பக்கங்கள் 08

Registered as a News paper in Srilanka

# வலம்புரி
# VALAMPURI

மல்லிகா
மிக்சர்
மாளிகை
காரமான சுவையுடன்
ரேஸ்ற்றி பொம்பே ரிப்பீஸ்
ரேஸ்ற்றி ஊறறானிக் காரவடை
ரேஸ்ற்றி பரவளள பீஸ்
இல 149, மின்சார நிலைய வீதி.
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்.

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 12 வியாழக்கிழமை (27.12.2001) தொலைபேசி 3378 ஒலி 08

## தமிழ்மக்களின் அடிப்படைப்பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு மார்ச்சுக்குமுன் சமாதானப்பேச்சு சாத்தியமில்லை

# கதிர்காமரின் திட்டத்தின் படியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## செய்தியாளர் மாநாட்டில் பிரதமர் ரணில்

(நமது நிருபர்)

தமிழ்மக்களுக்குரிய மனிதாபிமானப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படாதவரை அரசியல்ரீதியான பேச்சுவார்த்தைகள் எதனையும் நாம் முன்னெடுக்க முடியாது. இதனால் மனிதாபிமானப் பிரச்சினைகள் முதலில் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

இந் நிலையில் 2002ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகள் எதனையும் விடுதலைப்புலிகளுடன் நடத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக நான் நம்பவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

புதுடில்லி சென்று இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடகதியபின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

அந்த மாநாட்டில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேலும் தெரிவித்ததாவது.

இனப்பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாக உள்ள தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படாமல் அரசியல் தீரவுப் பிரச்சினை குறித்து பேச முடியாது. இதனால்தான் நாம் தற்போது அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வழிவகைகளில்

(8ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல்கள் அடுத்தவருடம் பெப்ரவரியில்

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் அடுத்தவருடம் பெப்ரவரி மாதம் 25ம் திகதி முதல் மார்ச் மாதம் 1ம் திகதிவரை நடத்துவது எனஅமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார். நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்களும் கடந்த வருடம் நடைபெற்றிருக்க வேண்டும் ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு அத் தேர்தலை மேலும் ஒரு

(8ம் பக்கம் பார்க்க)

## ரணிலின் சமாதான முயற்சிக்கு ஏ.எச்.எம் பௌசி பாராட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் எடுக்கும் நடவடிக்கைகள் ஆக்கபூர்வமானவையென்று முன்னாள் அமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பியுமான ஏ.எச்.எம். பௌசி பாராட்டியுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா எடுக்கும் நடவடிக்கைகள் வெற்றி பெறும் என்றும் முன்னைய பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகள் தட்டிக்கழித்ததைப் போல் இதையும் தட்டிக்கழிக்காமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் புலிகள் பேச முன்வர வேண்டும் என்றும் பௌசி கோரியுள்ளார்.(வ)

## மத்தியஸ்த உதவி கோரி

## தொழில் அமைச்சர் மகிந்த அடுத்தவாரம் நோர்வே பயணம்

### அன்ரன் பாலசிங்கத்தையும் சந்திப்பார்?

## தமிழீழம் – ஆயுதம் கைவிடாதவரை புலிகளின் தடை நீக்கப்படக் கூடாது

(கொழும்பு)

புதுடில்லி சென்று இனப் பிரச்சினை தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தியபின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

அந்த மாநாட்டில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற் கண்டவாறு அவர் தெரிவித் துள்ளார்.

செய்தியாளர் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேலும் தெரிவித்ததாவது.

படைக் காரணமாக உள்ள தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப் படாமல் அரசியல் தீர்வுப் பிரச்சினை குறித்து பேச முடியாது. இதனால்தான் நாம் தற்போது அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வழிவகைகளில்

(8ம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் எடுக்கும் நடவடிக்கைகள் ஆக்க பூர்வமானவையென்று முன்னாள் அமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பியுமான ஏ.எச்.எம். பௌசி பாராட்டியுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா எடுக்கும் நடவடிக்கைகள் வெற்றி பெறும் என்றும் முன்னைய பேச்சு வார்த்தைகளை விடுதலைப் புலிகள் தட்டிக்கழித்ததைப் போல் இதையும் தட்டிக்கழிக்காமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் புலிகள் பேச முன்வர வேண்டும் என்றும் பௌசி கோரியுள்ளார்.(வ)

## மத்தியஸ்த உதவி கோரி

# தொழில் அமைச்சர் மகிந்த அடுத்தவாரம் நோர்வே பயணம்

### அன்ரன் பாலசிங்கத்தையும் சந்திப்பார்?

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே அனுசரணை ஏற்பாட்டாளராக செயற்படுவது குறித்து நோர்வேயின் கருத்துக் களை அறிவதற்கு தொழி லமைச்சர் மகிந்தசமரசிங்க அடுத்தவாரம் நோர்வேக்கு பயண மாகவுள்ளார்.

நோர்வேசெல்லும் அவர் நோர்வேயின் புதிய பிரதமரை சந்தித்து பேசவுள்ளார். இச் சந்திப்பின்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அனுசரணை ஏற்பாட்டாளராக எரிக்சொல்கெய்மை நியமிக் குமாறு அமைச்சர் கோரவுள்ளார்.

இதனை அடுத்து அமைச்சர் இலண்டன் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

# தமிழீழம் – ஆயுதம் கைவிடாதவரை புலிகளின் தடை நீக்கப்படக் கூடாது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டு ஆயுதங்களை மீளக்கையளிக்காத வரையில் அவர்கள்மீதான தடை நீக்கப்படக்கூடாது. இதைவிடுத்து புலிகள் மீதான தடை நீக்கப்படுமானால் அது பாரதூரமன விளைவுகளை ஏற்படுத்தும் என்று ஜே.வி.பி விடுத்துள்ள அறிக்கையொன்றில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தடைநீக்கம் குறித்து அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.,

விடுதலைப் புலிகளின் கடந்த கால செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டு அவர்கள்மீதான தடையை அரசு நீக்குமானால் அதனை எதிர்த்து நாடுதழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை தேர்தலின் பின்னரும் வன்முறைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதனால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்தில் இன்று மாலை ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தவுள்ளதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது.

# யுத்தநிறுத்தத்தை புலிகள் சீராகக் கடைப்பிடிக்கின்றனர்

### பிரிகேடியர் சரத்கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தமும் அரசாங்கத்தின் மோதல் தவிர்ப்பும் அமுலுக்கு வந்த 48 மணி நேரத்தில் எந்த விதமான மோதல் சம்பவங்களோ, தாக்குதல் சம்பவங்களோ இடம் பெறவில்லையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்ததை கௌரவமான முறையில் கடைப்பிடிக்கிறார்கள். அதேபோல் அரச படைகளும் மோதல் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளன. இதனால் வடக்குக் கிழக்குப் பகுதியில் பூரண அமைதி நிலவுவதாகவும் பிரிகேடியர் சரத் கருணாரத்ன தெரிவித்துள்ளார். (வ)

## பனை அ.ச. தலைவராக சிவபாதம்?

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக பி. சிவாபாதம் நியமிக்கப்படலாமென்று தெரிவிக்கப் படுகிறது.

இவ் [illegible]

# சார்க் மகாநாட்டில் பயங்கரவாதம் குறித்து விவாதிக்கப்படவேண்டும்.

### வாஜ்பாயிடம் பிரதமர் ரணில் வலியுறுத்து

(சென்னை)

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பான சார்க் அமைப்பின் வருடாந்த உச்சி மகாநாட்டில், பயங்கரவாதம் சம்பந்தமாக ஆராயப்படவேண்டும் என்று பிரதமர் ரணில்விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாயை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து பேசிய பின்னர் இந்தியப் பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றினார். இதன் போதே ரணில் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் சார்க் அமைப்பை பொறுத்தவரையில் இந்திய பாகிஸ்தான் விவகாரம் இரு தரப்பு சம்பந்தப்பட்ட விடயம், ஆனால் இவ்வமைப்பு யதார்த்த பூர்வமாக செயற்படவேண்டுமானால் பொருளாதார விடயங்கள் பற்றி அதிக கவனம் செலுத்த வேண்டும். சார்க் மகாநாட்டில் பயங்கரவாதப் பிரச்சினை முக்கிய பிரச்சினையாக விவாதிக்கப்பட வேண்டும் என்று வாஜ்பாயுடன் பேசியதாகவும் ரணில் கூறினார்.

இதே வேளை சார்க் உச்சி மகாநாடு அடுத்த வாரம் நேபாளத்தில் நடைபெறஉள்ளது. இதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட தென்னாசியாவின் முக்கிய தலைவர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

உச்சி மகாநாட்டில் பயங்கரவாதம் தொடர்பாக இந்தியாவும் தனது ஆட்சேபத்தை தெரிவிக்கஉள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.இதேவேளை சார்க் மகாநாட்டிற்குச் செல்லும் ஜனாதிபதி சந்திரிக்கா இனப்பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமருடன் பேசுவார் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (இ)

நடுவு நிலை தவறா. நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### அறை வாடகைக்கு

யாழ் நகரில் நகைத் தொழிலாளர்கள் வேலை செய்வதற்கு உகந்த அறைகள் வாடகைக்குஉண்டு தொடர்பு 1மணிக்குப்பின் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426, (302) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். (4107)

### சோதிடம்

கைரேகை, ஜாதகக் குறிப்பு, வீட்டுநிலையம், விவாகப் பொருத்தம், நினைத்தகாரியம் பார்ப்பதுடன், வாணி திருமாங்கல்ய சேவையும் நடைபெறுகின்றது; சகல இனமதத்திலும் உள்நாட்டு, வெளிநாட்டு ஆண், பெண் குறிப்புகள் உண்டு. நேரில் தொடர்புகொள்ளவும்; தொடர்பு ஞாயிறுதவிர மு.ப 9 0^-12.00 மணிவரை வாணி சோதிடம். 237/16. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 22/1 கச்சேரி வீதி நல்லூர். சோதிடர் சி. கணேசன். (4110)

### தவறிவிட்டது

வேலணை கிழக்கு, 4ம் வட்டாரம், வேலணை எனும் முகவரியைச் சேர்ந்த பால சுப்பிரமணியம் சிறிதரன் என்பவருடைய விசேட அ. அட்டை, நேவி அ. அட்டை என்பன நெல்லியடிப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீ ஐங்கரா பிரதான வீதி, நெல்லியடி கரவெட்டி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (4112)

# புலிகளுடன் பேச உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்

## திருமலை மக்கள் ஐ.நா செயலருக்கு மகஜர்

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் அவர்களுடன் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க உலகநாடுகள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு திருகோணமலை வாழ் மக்கள் மகஜர் அனுப்பியுள்ளனர்

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

ஐரோப்பிய நாடுகளால் இலங்கை குடியேற்ற நாடாக மாற்றப்படுவதற்கு முன்னர் தனித் தமிழ்அரசு காணப்பட்டது. குடியேற்ற வாதக் கொள்கையாலும் ஆட்சியாலுமே அந்நிலைமை அற்றுப் போனது. இதனையடுத்து சிங்கள அரசாங்கங்கள் திட்டமிட்ட குடியேற்றங்களை 1958 ஆம் ஆண்டு முதல் ஆரம்பித்தன அத்துடன் தமிழர்களுக்கு எதிரான கலவரங்களும் அதிகரித்து இலங்கையின் ஏனைய மாகாணங்களில்இருந்துதமிழ் மக்கள் வடக்கு-கிழக்குக்கு இடம் பெயர்ந்தனர்.

ஆனால் வடக்குகிழக்கிலும் ஒழுங்காக இருக்க முடியாதவாறு அரசாங்கம் காலத்துக்கு காலம் யுத்தத்தை தோற்றிவித்தது இதனால் இப்பிரதேச மக்களும் இடம் பெயர்ந்து உலகின் பல பாகங்களுக்கும் சென்று அகதிகளாகி உள்ளனர்;

இத்தகைய நிலைமையைப் போக்கி தமிழ் மக்களுக்கு உரிமை சுதந்திரம் கிடைக்கபாடுபட வேண்டுமென்றுஅம் மகஜரில் மேலும்தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

# ரூ. 120 மில்லியன் கடன் முன்னைய அரசு பெற்றது

## அமைச்சர் அமரதுங்கா

(புத்தளம்)

சென்ற ஏழு வருடகாலத்தில் 120 மில்லியன் ரூபாவை முன்னைய அரசாங்கம் கடன் பட்டுள்ளது. இதன் மூலம் இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் 5 ஆயிரம் ரூபா கடனாளியாக மாறியுள்ளனர். இந்தக் கடனிலிருந்து மக்களை காப்பாற்றவேண்டிய பொறுப்பு எமது அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. என்று உள்ளகப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

சென்ற வியாழக்கிழமை சிலாபத்தில் புத்தளம் மாவட்ட சமாதானக்குழுவின் கூட்டம் சேர்லிகொரியா மைதானத்தில் நடைபெற்றது, இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் மேலும் பேசுகையில்,

இலங்கை வரலாற்றில் புத்தளம் மாவட்டத்திலேயே தேர்தல் வன்முறைகள் மிகக் கூடுதலாக நடைபெற்றுள்ளன எனவேதான் சமாதானக் குழு இங்கே அமைக்கப்படுகின்றது

பொலிஸ் அதிகாரிகள் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டியவர்கள் அவர்கள் பொது மக்களின் அடிப்படை உரிமைகளைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளைக் கைவிட்டு நேர்மையாகச் செயற்பட வேண்டும்.

பொலிஸார்மீது பெருமளவு முறைப்பாடுகள் செய்யப் பட்டுவருகின்றன. எனவே பொலிஸ் சேவைக்குள் அரசியல் செல்வாக்கு செலுத்தப் படுவதை பொலிஸார்நிறுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார். (எ)

# அரசியலில் மக்களை ஏமாற்றியோர் தோல்வி

## காணி அமைச்சர்

(கொழும்பு)

நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் போலி வார்த்தைகளால் மக்களை ஏமாற்ற நினைத்தவர்கள் படுதோல்வி அடைந்துள்ளார்கள் என்று காணி அமைச்சரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ராஜிதசேனாரத்னா கூறியுள்ளார்,

களுத்துறை மாவட்ட செயலகத்தில் பத்திரிகையாளர் மத்தியில் இவ்வாறு பேசிய அமைச்சர் தொடர்ந்துபேசுகையில் எல்லாக் கட்சிகளின் உதவியுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு நாட்டை நல்ல முறையில் கட்டியெழுப்ப எமது அரசுமுயற்சி எடுத்து வருகிறது என்று குறிப்பிட்டார், (எ)

# க.பொ.த (உ-த) பரீட்சை

## மாணவர்பெற்ற புள்ளிகள் விரைவில் வெளியிடப்படும்

(கொழும்பு

2001 ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட க. பொ. த (உ-த) பரீட்சையில் மாணவர்கள் பெற்றபுள்ளிகள் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக திறக்கப்பட்ட ஒருசில நாட்களுள் வெளியிடப்பட வுள்ளது

பல்கலைக்கழக அனுமதிக்கு இதுவரைகாலமும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மொத்தப் புள்ளி அடிப்படை இம்முறை கடைப்பிடிக்கப்படமாட்டாது என்றும், Z - ஸ்கோர் எனப்படும் புள்ளி விபரவியல் அடிப்படையே பின்பற்றப்படுமென்றும் அறியப்படுகிறது.

சர்வதேச தரத்திற்கு அமைவாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் குழு வொன்று செய்த சிபார்சின்பேரில் பல்கலைக்கழக மானியக் குழு இதனைத் தீர்மானித்துள்ளது (உ)

# பொறளை நகரசபை தலைவரை கண்ட இடத்தில் கைது செய்ய உத்தரவு

(பொறளை)

பொறளை நகரசபைத் தலைவர், மற்றும் ஒருநகர சபை உறுப்பினர் ஆகியஇருவரையும் கண்டஇடத்தில் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு பொறளை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒன்றை ஆராய்ந்த பின்னரே நீதிவான் சரத்சந்திர ஸ்ரீ கருணரட்ண இவ் உத்தரவை விடுத்துள்ளார்;

பொலிஸாரல் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நடந்து முடிந்த 12வது பொதுத் தேர்தலில் பொறளையில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளுடன் தொடர்புடையவர்களில் மிகவும் முக்கியமானவர்கள் என்பதால் அவர்கள் இருவரையும் விசாரிக்க பொலிஸார் எடுத்தமுயற்சி பெரும் தோல்வியடைந்துள்ளதால் அவர்கள் பற்றி நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. உ-7

# கரோல் நிகழ்வில் கருத்து முரண்பாடு

[பாசையூர்]

ஈச்சமோட்டைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு கரோல் நிகழ்ச்சி நடாத்திய குழுவினருக்கும் அப்பகுதியிலுள்ள இளைஞர் குழுவொன்றிற்கும் இடையே கருத்துமுரண்பாடு ஏற்பட்டது

நிகழ்ச்சியை நடாத்தச் செல்லும் வேளை இளைஞர் குழு கிண்டல் புரிந்ததாக நிகழ்ச்சிக்குழுவினரும், அப்படி செய்யவில்லையென மறுதரப்பும் கூறிவருகின்றன. இதனால் அப் பகுதியில் சிறு பதற்ற நிலையொன்று உருவாகியுள்ளது.

இந்தக் கரோல் நிகழ்ச்சி அப்பகுதி சனசமூக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது; (உ-242)

# ஆங்கிலகற்கைநெறிக்கான வாய் மொழிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் தேசிய ஆங்கில கற்கைநெறிக்கானவாய்மொழிப் பரீட்சை இன்று காலை 9 மணிக்கு தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதுவரை இதற்கான அனுமதிஅட்டைகளைப் பெறாதவர்களும் நேரத்தோடு அனுமதி அட்டையைப் பெற்று வாய்மொழிப் பரீட்சைக்கு தோற்றலாம் என்று அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இன்று ஆரம்பமாக இருந்த தொழில் நுட்பக்கல்லூரியின் ஆண்டிறுதிப் பரீட்சைகள் அனைத்தும் எதிர்வரும்ஜனவரி மாதம் 2ஆம் திகதிக்கு பிற்போடப் பட்டுள்ளது தெரிந்ததே(உ-2)


## அறிவித்தல்

**மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளின் வாடகைக் குடியிருப்பாளர்கள் கவனத்திற்கு**

யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளின் வாடகை குடியிருப்பாளர்கள் மாநகர சபையுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையைமீறி செயற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே பின்வரும் வகையான கடைகளின் குத்தகை உடன்படிக்கையை இரத்துச்செய்து மீள் கேள்வி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்;

1. உப வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகள்.
2. சபையுடன் செய்துகொண்ட உடன்படிக்கை காலாவதியாகி மீளவும் உடன்படிக்கையை புதுப்பித்துக்கொள்ளாத கடைகள்.
3. சபையின் அனுமதியின்றி கடையில் திருத்தம் / இணைப்பு வேலைகள் செய்யப்பட்ட / செய்யப் படும் கடைகள்.
4. தொடர்ச்சியாக இரண்டு வாரங்களுக்கு மேல் வியாபாரம்நடத்தாமல் பூட்டியுள்ள கடைகள்
5. குறித்த வியாபாரம் தொடர்பாக சபையால் வழங்கப்படும் வருடாந்த உத்தரவுப்பத்திரம் பெறாத கடைகள்.
6. மூன்று மாத காலத்துக்கு மேல் வாடகைக் கட்டணத்தை செலுத்தாமல் நிலுவையாகவுள்ளகடைகள்.

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.
(கி-3039)


# வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் உலகப்புகழ்பெற்ற மேற்குவங்க இயக்குனரான SATYAJITRAY இயக்கிய PREM CHANDன் மூலக்கதையை அடிப்படையாகக் கொண்ட SHATRANJ-KE-KHIIARI' [THE CHESS PLAYERS] என்ற ஆங்கில உபதலைப்புகளுடனானவங்க மொழித் திரைப்படம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-2)

# விஞ்ஞான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க, தூயவிஞ்ஞானப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விஞ்ஞானக் கருத்தரங்கு இன்று பி. ப 2. 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மகப்பேற்று மருத்துவ நிபுணர் டாக்டர் திருமதி ஜி. பவானி, குடும்பத்தினைத் திட்டமிடுதல் என்ற தலைப்பில் இந்நிகழ்வில் கருத்துரையாற்றவுள்ளார். (உ)

# பதவி உயர்வு நேர்முகதேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இராம சேவகர்களுக்கான தரம்1 பதவிஉயர்வுக்கானநேர்முகப் பரீட்சை நேற்றைய தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையிலே இடம்பெற்ற இந்நேர்முகத் தேர்வில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 21 கிராம சேவகர்கள் கலந்து கொண்டனர்; (உ-10,106)

# மாணவர்க்கு உதவி

(யாழ்ப்பாணம்)

நவாலி ஊன்றுகோல் அறப்பணியகம் 5ம்வகுப்பு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நவாலிப் பகுதியைச் சேர்ந்த மாணவர்க்கு வழமை போல் இம்முறையும் பாராட்டுவைபவத்தினை ஒழுங்கு செய்து நிதிஅன்பளிப்பினை வழங்குவதென்று நெறியாளர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்க்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குவதோடு மாதம்தோறும் பணியகத்திடம் நிதியுதவி பெற்று வரும் மாணவர்களோடு மேலும்மாணவர்களைச் சேர்த்து அவர்களுக்கும் அவ்வுதவியை வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. [எ]

# மழையால் பாலம் சேதம்

[அளவெட்டி]

கடந்த சில தினங்களாகப் பெய்த பெருமழையினால் கோப்பாய் பிரதான வீதியில் உள்ள பாலம் உடைந்து வாகனப் போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டதால் பிரயாணிகள் சிரமங்களுக்குள்ளான தாகத் தெரிவிக்கப்படுகிறது; [எ-237]

## இராசி பலன்

27-12-2001
(மார்கழி 12, வியாழன்)
துவாதசி மாலை 6 43 வரை
கார்த்திகை பி இ 2.26 வரை
ராகுகாலம் 1.57- 3.27
நல்லநேரம் 7 57- 9 27
கார்த்திகை விரதம்.

**மேடம்**
வாக்குக் கலகம், காரிய தாமதம், திடீர் நன்மை, மாதர் நட்பு.

**இடபம்**
மனச் சஞ்சலம், காரியம் கைகூடும், பிரியம், பெரியோர் மதிப்பு.

**மிதுனம்**
பிரயாணக்கஷ்டம், கோபப் படுதல், பொருள் விரயம், முயற்சி தாமதம்.

**கடகம்**
நினைத்தகாரியம்கைகூடும், பொருள் சேர்க்கை. கௌரவம், குடும்ப சுகம்.

**சிங்கம்**
சுபநிகழ்வு, முயற்சி வெற்றியளிக்கும், தூரதேசச்செய்தி, அதிகாரம்;

**கன்னி**
மனப்பதட்டம், பிரயாணம், காரிய தாமதம், உடல் நலக் குறைவு.

**துலாம்**
உறவினர்வெறுப்பு, முயற்சி தடங்கல், வியாதி, திருடர் பயம்.

**விருச்சிகம்**
அபூர்வ சந்திப்பு, காரியம் கைகூடும், தனவரவு, போசன சுகம்;

**தனுசு**
தொழில் முன்னேற்றம், மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், சத்துரு ஜெயம்,

**மகரம்**
தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, காரிய இடையூறு, திடீர் பயணம்.

**கும்பம்**
ரோக பயம், தன்னம்பிக்கைக் குறைவு, முயற்சி தாமதம், எதிரிகள நேசம்.

**மீனம்**
காரிய நன்மை, வாக்கு மேன்மை, தனவரவு, இனிய சம்பவம்;

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

-வளவன்

### காணிகொள்வனவு

சந்தைஅமைக்கவென, காங்கேசன்துறை வீதியில் குளப்பிட்டிச் சந்திக்கு அருகாமையிலுள்ள காணி, நல்லூர் பிரதேச சபையினால் 16 இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
(உ-9)

### புலிகள் மீது விதித்துள்ள தடை

# சமாதானப் பேச்சுக்களுக்கு இடையூறு விளைவிக்குமானால் அதனை நீக்குதல் அவசியம்

## மஹகல்கடவல புஞ்ஞசாரதேரர் கருத்து

(கொழும்பு)
நாட்டில் நிரந்தர சமாதானம் தோன்றும் வகையில், அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ள இச்சந்தர்ப்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை ஒரு பிரச்சினையாக அமையுமானால் அவர்கள் மீதான தடை நீக்கப்பட்டு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஏழு கோறளைகளின் தர்ம நிலையத் தலைவரும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பவருமான வண மஹகல்கடவல புஞ்சயசாரதேரர் தற்போதைய சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக கருத்து வெளியிடுகையில் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,
தமிழ் மக்கள் பல வழிகளாலும் பாதிக்கப்பட்டபோது அவர்களின் நலன் கருதிச் செயற்பட்ட விடுதலைப் புலிகள் தியாகங்கள் பலவற்றைப் புரிந்துள்ளனர்.

தலைவர் பிரபாகரனின் தலைமைத்துவம் காரணமாக மாபெருஞ்சக்தியாகத் திகழும் புலிகள் நீண்டநாள்போராட்டம் நடத்திய அனுபவம் உடையவர்கள்.

இவ்வாறான புலிகளுடன் மட்டுமே தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக பேச வேண்டும் என ஏனைய தமிழ் கட்சிகளும் விரும்புவதால், அவர்களுடன் பேச்சு நடத்தி நல்லதொரு தீர்வு காணப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைகளை குழப்ப முயல்வோர் பற்றியும் ஆயுத வியாபாரிகள் பற்றியும் எண்ணாமல், நாட்டிலுள்ள அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ள இவ்வேளை, அனைவரும் இதைப் பயன்படுத்தி நிரந்தர சமாதானம் உருவாக வழியமைக்க வேண்டுமெனவும் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ)

### விடுவிக்கப்படாத பிரதேசங்களில்

## மின்இணைப்பு வேலைகளை ஆரம்பிக்க அரசு உத்தரவு

(மண்டூர்)
மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுவிக்கப்படாத4 கிராமங்களில் இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ள மின் இணைப்பு வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு, குறிஞ்சாமுனை, கன்னங்குடா ஆகிய விடுவிக்கப்படாத பிரதேசத்திலுள்ளகிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி 10கோடிரூபாவை ஒதுக்கியதும்,

இவ்வருட ஆரம்பத்தில் மின் இணைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சொற்ப காலத்தில் பாதுகாப்பு படையினரின் உத்தரவையடுத்து இடை நிறுத்தப்பட்டதும் தெரிந்ததே. (உ)

### ஈமக்கடன் நிறைவேற்ற

## கரையூர் மக்கள் கடும் பிரயத்தனம்

(சுண்டுக்குளி)
துண்டி மயானத்தைப் பாவிப்பதற்கு படையினர் தடை விதித்துள்ளமையினால், ஈமக்கடன்களை நிறைவேற்ற பொதுமக்கள் பெரிதும் சிரமமடைந்து வருகின்றனர்.


மேற்படி மயானம், படையினரின் பாதுகாப்புப் பகுதிக்குள் கடந்த2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல உள்வாங்கப்பட்ட காரணத்தினால், ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், பாண்டியன்தாழ்வு பகுதி மக்கள் ஈமக்கடன்களை நிறைவேற்றும் பொருட்டு 5 மைல்களுக்கு அப்பால் உள்ள கோம்பையன் மணல் மயானத்தை நாடவேண்டி உள்ளது.

இதனால் ஏற்படும் சிரமங்கள் குறித்து சம்பந்தப்பட்ட மக்கள் பல தரப்பினருடனும் தொடர்பு கொண்ட போதிலும் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
(உ-110)

### அலுவலக முகாமைத்துவம்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகினால் நடத்தப்படும் கற்கை நெறிகளில் ஒன்றான அலுவலக முகாமைத்துவ கற்கை நெறிக்கான புதியவகுப்புக்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9:00 மணிக்கு இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரனால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இக்கற்கை நெறியானது மூன்று மாதகாலத்தைக் கொண்டது. (உ-2)




## இந்தியாவின் சிறந்த வீரர் சச்சின் டெண்டுல்கர்

(புதுடில்லி)
இவ்வாண்டின் சிறந்த இந்திய கிரிக்கெட் வீரராக சச்சின் டெண்டுல்கர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒவ்வொரு வருடமும் சிறந்த இந்திய வீரரை தேர்வு செய்யும் 'கேஸ்ட்ரால்' இந்திய நிறுவனம் மூன்றாவது முறையாகவும் சச்சினை தேர்வு செய்துள்ளது.

இதற்கான பரிசளிப்பு விழா கடந்த வாரம் பெங்களூரில் நடைபெற்றது. இதில் ஐந்து லட்சம் ரூபாவும் வெற்றிக் கிண்ணமும் சச்சினுக்கு வழங்கப்பட்டது.

இவ் விழாவில் வாழ்க்கைச் சாதனையாளர் விருதுஇந்திய அணியின் முன்னாள் தலைவரான பால்லி உம்ரிகருக்கு வழங்கப்பட்டது .75 வயதான பால்லி டெஸ்ட் போட்டியில் ஒரே இன்னிங்ஸில் 200 ரன்களை எடுத்த முதல் இந்திய வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறந்த இளம் கிரிக்கெட் வீரருக்கான விருது விக்கெட் காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான அஜய் ராத்ரா விற்கு அளிக்கப்பட்டது.
(உ-2)

### மின்விளக்கில் டெஸ்ட் போட்டி

(புதுடில்லி)
முதல் தடவையாக டெஸ்ட் போட்டி ஒன்று மின் விளக்கு வெளிச்சத்தில் நடத்தப்பட்டு டெஸ்ட் சாதனைப் புத்தகத்தில் பதிவாகியுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையே கடந்த 19 ஆம் திகதி பெங்களூரில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டி நடைபெற்ற சமயம் மேக மூட்டத்தினால் போதிய வெளிச்சமின்றி இருந்தது. அதனால் மின்னொளியில் ஆட்டம் நடைபெற்றது.
(உ-2)

### முகமது அலியின்

## வாழ்க்கைச் சரிதம் திரைப்படமாகிறது

உலகப் புகழ் பெற்ற அமெரிக்காவின் குத்துச் சண்டை வீரர் முகம்மது அலியின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஹொலிவூட் திரைப்படம் ஒன்று 105 மில்லியன் டொலர் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்படத்தில் முகம்மது அலியின் பாத்திரத்தில் பிரபல நடிகர் வில்ஸ்மித் நடித்துள்ளார்.

இம்மாத கடைசியில் வெளியிடப்படவுள்ள இத்திரைப்படத்தில் 1964 இல் சன்லீஸ்டனுடன் மோதியது முதல் உலக குத்துச் சண்டை சம்பியனானதுவரையான 10 வருடகால குத்துச் சண்டை வாழ்க்கை வரலாறு உள்ளடக்கப்பட்டுள்ளது.

போட்டி தொடங்க முன்னர் எதிரியைஎத்தனையாவது சுற்றில் வீழ்த்துவேன் என அறிவித்து விட்டு அதே போன்று நொக் அவுட் முறையில் அவ்வீரரை வீழ்த்துவதன் மூலம் உலகப் புகழ் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது 'பார்கின்சன்' எனும் பக்க வாத நோயால் பாதிப்புற்றுள்ள முகம்மது அலி, தனது மகளான லைலா அலியையும குத்துச் சண்டை வீராங்கனையாக்கி உள்ளமை தெரிந்ததே.

தனிப்பட்ட ஒருவரின்வாழ்க்கைச் சரிதம் பெருந்தொகைச் செலவில் படமாக தயாரிக்கப்படுவது இதுவே முதற்தடவையாகும். (உ-2)

### குமாரின் கொலைக்கு

# பொ. ஐ. மு. அரசே காரணம்

## மகன் திட்டவட்டமாக தெரிவிப்பு

(கொழும்பு)
படுகொலைசெய்யப்பட்ட தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலத் (ஜூனியர்) தின் மகன் கஜேந்திரகுமார் தனது தந்தையின் கொலை விவகாரத்தை உடனடியாக விசாரணைசெய்யவேண்டுமென்று கோரியுள்ளார்.

கடந்த அரசாங்க காலத்தில் இப்படுகொலை தொடர்பான விசாரணைகள் மட்டுப்படுத்தப்பட்டன. பொலிஸார் முழுமையான விசாரணைகளை செய்லதினின்றும் தடுக்கப்பட்டனர்;

பொ. ஐ. மு. வின் மேலிடத்தவரின ஆசிகளுடனேயே படுகொலை நடந்திருப்பது தெரிகிறது. கடந்த அரசாங்கத்தில் வெளியுறவு அமைச்சராயிருந்த லக்ஷ்மன் கதிர்காமர் இலங்கைத்தமிழர்கள் பற்றிய தவறான பிரசாரங்களைவெளிநாடுகளில் செய்து வந்த வேளை எனது தந்தையார் அவற்றை மறுத்து சர்வதேசத்திற்கு உண்மையை வெளிப்படுத்தி வந்தார்.

இதனால் பொ. ஐ. மு. அரசுக்கு இக்கட்டான நிலை தோன்றியது. இதுவே எனது தந்தையார் கொலைசெய்யப்பட்டதற்கு காரணம் என்று கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

ஐ. தே. மு. அரசு இது தொடர்பாக சட்டப்படி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும், என்றும் கஜேந்திரகுமார் கேட்டுள்ளார்.
(உ)

## விளையாட்டு விழா தொடர்பான அறிவுறுத்தல்

வடக்கு-கிழக்கு விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன், புதிய ஆண்டில் நடத்தப்படும் விளையாட்டுவிழாவின் முதற் கட்டமான பிரதேச செயலகப்பிரிவு வாயிலாக நடத்தப்படும்பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான போட்டிகள் குறித்த அறிவுறுத்தல்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினால், சம்பந்தப்பட்ட சகலபிரதேசசெயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மெய்வல்லுநர்ப் போட்டிகள், குழு நிலைப் போட்டிகளான வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம், கபடி, எல்லே, மென்பந்து- மேசைப்பந்து, பூப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் கொக்கி ஆகிய போட்டிகள் இவ்வாறு இடம் பெறவுள்ளன.

போட்டிக்கானமுடிவுத்தினம் எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி என்பது குறிப்பிடத்தக்கது.

இப் போட்டிகளுக்குப் பொறுப்பாக மேலதிக அசராதிபர் து. வைத்திலிங்கம் இருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10, 106)

# மாத்தட்டுப்பாட்டின் பின் விளைவு
# சிற்றுண்டிகளின் விலைகள் உயர்வு

## கையறு நிலையில் குடாநாட்டு மக்கள்

(காரைநகர்)

யாழ் நகரப்பகுதியிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளில், சிற்றுண்டிகளின் விலை கடந்த 24 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவிற்கான விலையேற்றம் மற்றும் அதற்குண்டான தட்டுப்பாடு, தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு என்பன காரணமாகவே இவ்வாறு சிற்றுண்டிகளின் விலையை அதிகரிக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தட்டுப்பாட்டால் யாழ். மாவட்டத்திலுள்ள அநேக பேக்கரிகள் பாண் மற்றும் உணவுப் பொருட்களின் உற்பத்தியை கைவிடும் நிலையிலுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எரிபொருள் விலை உயர்வு. மாவிற்கான தட்டுப்பாடு ஆகியவை காரணமாக பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் யாழ். குடாநாட்டு மக்கள், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார்கள் என்ற நம்பிக்கையில் தாம் தெரிவு செய்த பிரதிநிதிகள் இது விடயத்தில் மௌனம் காப்பது குறித்து அதிருப்தி வெளியிட்டுவருகின்றனர். (உ-226)

# வடக்கு முஸ்லிம் மக்களை மீளக்குடியேற்றுவது பற்றி புலிகளுடன் பேசத்தயார்
## அமைச்சர் நூர்தீன் அறிவிப்பு

(கொழும்பு)

அச்சம் காரணமாக வடக்கில் இருந்து இடம் பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பாக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவுள்ளதாக வன்னி புனர்வாழ்வுக்கான உதவி அமைச்சர் நூர்தீன் மஷூர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று தனது பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளும் வைபவத்தில் இதனைத் தெரிவித்த உதவி அமைச்சர்.

தமிழ் சிங்கள மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்றாற்போல் பாகுபாடின்றி தமது சேவை அமையும் என்றார்.

இதே வேளை யாழ் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற அமைச்சர் நூர்தீன் மஷூர், தனக்கு அதிகளவு தமிழ் நண்பர்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டார். (உ)

# அமைச்சர் மகேஸ்வரன்
## மாவிட்டபுரம் செல்ல ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் கீரிமலை சிவன் கோயில் ஆகியவற்றுக்கு நாளை காலை 9.00 மணியளவில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது பத்திரிகையாளர்களையும் அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-5)

# இ. தொ. கா. வில் இருந்து பிரிந்து சென்றோரை சேர்க்க முயற்சி

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்ற அனைவரும் கருத்து வேறுபாடுகளையும், தனி மனித கோபதாபங்களையும் மறந்து மீண்டும் இ. தொ. கா. வில் இணைந்து செயற்பட முன்வரவேண்டும்.

இவ்வாறு இ. தொ. கா. உப தலைவர் எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

மலையகத் தொழிற் சங்கங்கள் அனைத்தும் தனியொரு அமைப்பாக உருவெடுத்துச் செயற்படுவதன் மூலம் மலையக மக்களுக்குக் கிடைக்க வேண்டிய சகல உரிமைகளையும், சலுகைகளையும் இலகுவில் பெற்றுக்கொள்ள வாய்ப்புக் கிட்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# வள்ளித்தோட்டம் பகுதியில் ஆயுத வேட்டை ஆரம்பம்

திருகோணமலை வள்ளித்தோட்டப் பகுதியால் ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்கள் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படும் இடங்கள், பொலிஸாரால் தீவிரமாக சோதனையிடப்பட்டது.

அப்பகுதியில் நிலத்துக்கு அடியில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தில் முக்கியமான இடங்களில் பாரிய கிடங்குகள் வெட்டப்பட்டு சோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் முதல் பொலிஸார் மேற்கொண்டு வரும் இந் நடவடிக்கையின் மூலம் நேற்றுவரை எதுவித ஆயுதங்களும் மீட்கப்படவில்லையென திருமலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாரிய மண் அகழ்வு வாகனங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் ஆயுதம் தேடும்பணி தொடருமென்று திருமலை பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (இ-4)

# டெங்கு காய்ச்சலினால் நாடளாவிய ரீதியில் 43 பேர் மரணம்

நாடளாவியரீதியில் 3 ஆயிரத்து 442 பேரிற்கு டெங்கு காய்ச்சல்நோய் அறிகுறி இனம் காணப் பட்டுள்ளது.

இவர்களில் 43 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வேகமாகப்பரவி வரும் டெங்குக்காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்த மாகாண மட்டத்தில் இயங்கும் சுகாதாரப் பணிப்பாளர்கள் பொது மக்களுக்குப் போதிய அறிவுறுத்தல்களை உடனடியாக விடுக்க வேண்டும் என சுகாதார பிரதியமைச்சர் சஜித் பிரேமதாச பணிப்புரை விடுத்துள்ளார் (உ)

# சித்த மருத்துவத்துறை மாணவர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வு

(காரைநகர்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைக்கு புதிய கல்வியாண்டிற்கான மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினமே நேர்முகத் தெரிவில் தெரிவு செய்யப் படுபவர்கள் தமக்குரிய பதிவினை மேற்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-226)

# காணாமற்போனபடையினரின் பெற்றோர் சங்கத்தின் பேரணி ஒத்திவைப்பு

(கொழும்பு)

யுத்தத்தின்போது காணாமற் போன படைவீரர்களின் பெற்றோர்கள் சங்கம் அடுத்தமாதம் 26 ஆம் திகதி வன்னிப்பகுதிக்கு மேற்கொள்ளவிருந்த பேரணி, யுத்தநிறுத்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் ஈ. பி. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து 60 வாகனங்களில் 3 ஆயிரம் பேருடன் மடுவுக்குச் சென்று அங்கு தெரிவு செய்யப்பட்ட 10 பேர் விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்திக்க முன்னர் ஏற்பாடாகியிருந்தமை தெரிந்ததே.

யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தை நடத்துமாறும் காணாமல்போன தமது பிள்ளைகளை மீட்பதற்கான கோரிக்கைகளை இரு தரப்புக்கும் விடுப்பதுமே தமது நோக்கமாக இருந்ததென்றும்.

புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பும், அரசின் மோதல் தவிர்ப்பும் தமது கோரிக்கைகளை நிறைவேற்ற சாதகமாக அமைந்திருப்பதால் தமது நடவடிக்கையை ஒத்திவைக்க முடிவு செய்துள்ளதாக நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# பதுளை ஆஸ்பத்திரியில் தமிழர்கள் புறக்கணிப்பு

(பதுளை)

பதுளை பொதுவைத்திய சாலைகளில் தமிழர்கள் குறிப்பாக தோட்ட மக்கள் பாரபட்சமாகவும் தரக்குறைவாகவும் நடத்தப்படுவதாக பல தரப்பில் இருந்தும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்தியர்களும், தாதியர்களுமே இவ்வாறான பாரபட்ச நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும்.

தோட்ட மக்கள் அவசர சிகிச்சைக்காக இவ்வைத்திய சாலைக்குச் சென்றாலும் இவர்கள் விடயத்தில் அக்கறை காட்டாது அசிரத்தையுடன் ஏனோதானோ வென்று வைத்தியம் செய்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

# சமாதானம் வேண்டி யாகம்

(மட்டக்களப்பு)

நாட்டில் சமாதானமும் சாந்தியும் ஏற்படுவதற்கு காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகள் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் மகா யாகத்தினை நடத்தியுள்ளார்.

யாகத்தில் சப்தரிஷி வளாகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பஞ்சலோகத்தினாலான 1650 கிலோ எடையுள்ள மகாமேரு இயந்திரம் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் வைத்துப் பூஜிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

# ஒளிவிழா

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை உயரப்புலம் புனித அடைக்கல நாயகி ஆலய வருடாந்த ஒளிவிழா இன்று மாலை 6.00 மணிக்கு ஆலய கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஆலய பங்குத்தந்தை அருட்திரு அன்ரனிப்பிள்ளை அடிகளார் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவின் பிரதம விருந்தினராக அருட்திரு ஆர். எக்ஸ். சகாயநாயகம் அடிகளார் கலந்துகொண்டு நத்தார் சொற்பொழிவினை ஆற்றவுள்ளார். (உ.232)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கொட்டடி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு நிலையத்தின் பாலர் கல்வி நிலையத்தில் பொ. ஸ்ரீராஜ புலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

# குரும்பசிட்டி மக்களின் வருடாந்த சுபீட்ச வழிபாடு

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் திருவெம்பாவை வழிபாடும் கூட்டுப் பிரார்த்தனையும் நாளை அதிகாலை 5.00 மணி முதல் ஏழாலை தெற்கு வசந்தபுரம் அருள்மிகு வசந்தநாகபூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

குரும்பசிட்டி கிராம ஆலயங்கள் சார்பாக மேற்படி சனசமூக நிலையத்தினரால் இக்கிராம மக்களின் சுபீட்சத்திற்காக வருடாந்தம் நடத்தப்படும் இவ்வைபவத்தில் இக்கிராமத் தலைவர்களை கலந்து கொள்ளுமாறு விழா அமைப்பாளர்கள் அழைப்புவிடுத்துள்ளனர்.

குரும்பசிட்டி கிராமத்தைச் சேர்ந்த மக்கள கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இடம் பெயர்ந்த நிலையில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வசித்துவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-106)

# வருடாந்த கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் முறைசாராக் கல்வி தொழிற்திறன் பயிற்சி நெறியின் வருடாந்தக் கண்காட்சி 2001 இன்று மு.ப 10.00 மணிக்கு நல்லூர் சி.சி.த.க பாடசாலையில நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் பிரமவிருந்தினராகக்கலந்துகொள்வார். (உ-2)

## தேர்தல் பிரசாரத்திற்கு
# அரச வாகனங்களை பாவிக்க அனுமதியளித்தோர்மீது நடவடிக்கை

கடந்த பொதுத் தேர்தலின் போது, அரச மற்றும் கூட்டுத்தாபன வாகனங்களையும், உடைமைகளையும் பயன்படுத்த அனுமதி அளித்த அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்,

இத்தகைய சட்டவிரோத செயல்கள் குறித்து பெரும் அளவிலான பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என்றும் குற்றத்தடுப்பு பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில், தனிநபர்களை துன்புறுத்தல், வதந்திகளைப் பரப்புதல், மக்களை அச்சுறுத்தல் என்பனவும் இடம்பெற்றுள்ளது தொடர்பாக எம்மால் அறியப்பட்டுள்ளது.

அரச வாகனங்கள், அரச உடமைகள் மற்றும் அரச ஒலி பெருக்கிகளின் மூலம் பிரசாரத்தில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் மீது சட்ட அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதைவிட, அரசியல் யாப்பின் திருத்தச்சட்டத்தின் பிரகாரம் அரச உடமைகளை தனிப்பட்ட பாவனைக்கு பயன்படுத்துதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இதற்கான நட்டப் பணத்தையும மேலதிக தண்டப் பணத்தையும் சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள அரசு தீர்மானம் எடுத்து வருகிறது.

எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கை எதுவும் இடம் பெறாதவாறு புதிய சட்டங்களை அரசு வகுத்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (உ-7)

## இன்று ஒரு தகவல்

# நிதானம்

'தானத்திலே சிறந்தது எது?' என்று ஒரு கேள்வியை கேட்டு 'தானத்தில சிறந்தது நிதானம்!' என்று அதற்கு பதிலும் சொல்வது உண்டு!

நிதானம் மிகவும் அவசியம் அதுவும் இன்றைய உலகத்திற்கு மிக மிக அவசியம்!

இன்றைக்கு உலகம் மிகபரபரப்பாக போய்க் கொண்டிருக்கிறது. பொறுமையாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறவர்களாலே கூட அவ்வாறு இருக்க முடிவது இல்லை.

பொறுமையை சோதிக்கிறதைப் போல பல சம்பவங்கள்...! அதையெல்லாம் சந்திச்சே தீரவேண்டியிருக்கிறது

எங்கே போனாலும வரிசையில்நிற்கவேண்டியிருக்கிறது: எங்கே போனாலும் காத்து நிற்க வேண்டி இருக்கிறது:

அலுவலகங்களிலேயோ' வீட்டிலேயோ கூட நீங்கள் நிதானமாக பொறுமையாக நடந்து கொள்ள தெரியவில்லை என்றால் உங்களுக்கு 'சிடுமூஞ்சி' 'முசுடு' இப்படியெல்லாம் பெயர் வைத்து விடுவார்கள்! அது உங்களுக்குத் தேவையா?

சரி... வாழ்க்கையிலே பொறுமை சாலி என்றுபெயர் வாங்க என்ன வழி?

முதல் கரு. நீங்கள் நினைக்கிறது. எதிர் பார்க்கிறது எல்லாமே நூறு சதவீதம் சரிவர நடக்க வேண்டும் என்று ஆசைப்படக்கூடாது.

எதுவாக இருந்தாலும் அதிலே ஓரளவு தவறு நடக்கலாம் என்பதைஎதிர்பார்த்தே இருக்க வேண்டும் ஓரளவுக்கு அதைதவிர்க்கவும் வேண்டும். ஒரு நண்பரை ஆறு மணிக்கு ஒரிடத்துக்கு வரச் சொல்லியிருக்கிறீர்கள். ஆறுமணிக்கு அவர் வரவில்லை. உடனே பொறுமையை இழக்க ஆரம்பிக்கக் கூடாது. ஒரு பத்து நிமிடம் தாமதம் ஆகலாம்: அவர் வரும் வழியிலே பஸ்சுக்கு கூட ஏதாவது பழுது வந்திருக்கலாம்! அதையெல்லாம் எதிர் பார்த்தே கொஞ்சம் காத்திருக்க வேண்டும் அதிலே தப்பில்லை!

சில சமயம் தாமதம் ஆகிறது கூட நல்லதாக முடியும். ஒரு பஸ்ஸை தவற விட்டு விட்டீர்கள் ...... ஐயோ கொஞ்சம் ஒரிரண்டு நிமிடம் முன் வந்திருந்தால் அதைப்பிடிச்சிருக்கலாம் என்று தவிக்க வேண்டாம் அடுத்தபடியாக வரும் பஸ் நேரடியாக நீங்கள் போக வேண்டிய இடத்துக்கேகொண்டுசென்றுவிடும் நேர்வழிப்பாதை பஸ்ஸாக கூட இருக்கலாம்.

சில நெருக்கடியான சூழ்நிலைகளை விளையாட்டாக எடுத்துக் கொள்வதற்கு பழக வேண்டும்.

சில இடங்களுக்கு போகும் போது காத்திருப்பதற்கு எங்கள் மனதை தயார் படுத்திக்கிட்டே போக வேண்டும்!

ஒரு ரயிலுக்கோ ... பஸ்ஸுக்கோ அல்லது விமானத்துக்கோ கப்பல் பிரயாணத்துக்கோ போகும்போது... அங்கே போய் நீங்கள் மணிக்கணக்காக காத்து நிற்க வேண்டும் புறப்படும் நேரம் கூடமாறலாம! நீங்கள் போ சேர்ந்ததும் அது உடனே புறப்படவேண்டும் என்று கட்டாயமா என்ன?

அதுமாதிரியான சமயத்திலே படிப்பதற்கு சில சுவாரஸ்யமான புத்தகங்களை கையிலே எடுத்துக்கொள்ளுங்கள்.

உங்களைசுற்றி எவ்வளவோ சுவாரஸ்யமான சம்பவங்கள் நடந்து கொண்டேஇருக்கும்... அதையெல்லாம் வேடிக்கையாகப் பாருங்கள்!

எதுக்காக காத்து நிற்கிறோமோ அந்தக் காரியத்திலே உண்மையாக எமக்கு ஒரு அக்கறை இருந்தால்... எமக்கு சலிப்புத் தட்டாது!

சில கோயில்களிலே பாத்திருப்பீர்கள்... தரிசனத்துக்காக பக்தர்கள் நாள் கணக்கிலே காத்து நிற்பார்கள் அவர்களெல்லாம் அலுத்துக் கொள்வது இல்லை!

ஆண்டவனை தரிசிக்க வேண்டும் என்ற உண்மையான அக்கறை இருக்கிறதாலேயே அவர்களுக்கு சலிப்பு தட்டுவதில்லை!

சில சினிமா வரிசை கூட அப்படித்தான்! பின்னேரம் ஆறுமணி ஆட்டத்துக்கு விடியற் காலை ஆறுமணிக்கே போய் நின்று விடுகிறது இல்லையா?

இன்றுமொரு முக்கியமான விஷயத்தை நாம் பழக்கப் படுத்திக்கொள்ள வேண்டும். சந்தர்ப்பத்துக்கு ஏற்றநேரம் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

நிறையப் பேர் எப்படியென்றால் அடுத்தபடியாக நடக்கப் போகும் விஷயத்திலேயே கவனமாக இருப்பார்கள்: அந்த நினைவிலேயே இந்த நிமிஷத்தை பொறுமை இல்லாமல் கழிப்பார்கள்!

ஒருவர் இருககிறார். அவர் எப்படி என்றால் அலுவலகம் முடிகிறத்துக்குள்ளேயே 'சேர்... சேர் 5 மணிக்கு எல்லாம் தயாராக இருங்கள்.. நாம் அந்த விடுதியிலே போய் உணவு உண்ண வேண்டும்! என்று 4 மணியிலிருந்துசொல்லிக் கொண்டிருப்பார்.

4.55 க்கே பரபரப்பாக வருவார்: இரண்டு பேரும் புறப்படுவோம் விடுதிக்கும் போவோம். சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போதே சார் சாப்பிட்டு முடிந்ததும் நேரே ஒரு புடைவைக் கடைக்கு போவோம்! என்று பரபரக்கசாப்பிட்டுப்புறப்படுவார்.

புடைவைக்கடையிலே அவசர அவசரமாக 'கெதியாக சிட்டை போடுங்கள் சார்..' சினிமாவுக்கு நேரம் வந்து விடும்! என்பார்.

சினிமா தியேட்டரிலே இருந்து கொண்டு அடுத்தபடியாக எங்க இரவு சாப்பிடுகிறது என்று யோசனை செய்து கொண்டு இருப்பார்.

எதுவுமே... அடுத்தநிமிடம் அடுத்த நாள், அடுத்த வாரம், அடுத்த வருடம் இது தான் அவர் சிந்தனை:

இந்த நிமிட மகிழ்ச்சிகரததை அவர் இழந்து விடுகிறார் அதனாலே வாழ்நாள் பூராக பொறுமை இன்மை, அவஸ்தை, அல்லல்!

அதனாலே நாங்கள் எல்லோரும் வாழ்க்கையிலே நிதானமாக இருக்க பழக வேண்டும். அதுக்காக இந்த நிதானத்துக்கு வேறுவிதமாக அர்த்தம் பண்ணக்கூடாது.

ஒருத்தர் அப்படித்தான்ஒரு தடவை அவர் குதிரைகாணாமல் போய் விட்டதாம்! அதுக்காக அவர் கவலைப்படவில்லை!

நிம்மதியாக இருந்தார்! சந்தோஷமாக இருந்தார்.

'என்ன சார்... இது உங்கள் குதிரை திருடப்பட்டுள்ளது. நீங்கள் கவலைப்படாமல் இருக்கிறீர்கள்!' என்று கேட்டார்கள அதற்கு அவர்;

'நல்ல வேளை சார் கட்டி இருந்த குதிரை காணாமல் போயிருக்கு! நான் அதற்கு மேலே இருக்கும் சமயம்தான் அது காணாமல் போயிருந்தால் நானும் சேர்ந்தே காணாமல் போயிருப்பேன்!' என்று கூறினார் மிகவும் நிதானந்தவறாத ஆர்!

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

---

### போதைப் பொருள்

# விற்பனை செய்வோரை கண்டுபிடிக்க விசேட பொலிஸ் குழு அமைப்பு

போதைப் பொருள் விற்பனையை இல்லாதொழித்து சமூகச் சீரழிவுகளைத் தடுப்பதற்கு உளதுறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, போதைப் பொருள் விற்பனை செய்வோரைத் தேடிக் கண்டுபிடிக்க விசேட பொலிஸ் குழுவொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிப்புரையினை, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பொலிஸாருக்கு விடுத்துள்ளார்.

விசேட தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு போதைப்பொருள் விற்பனை செய்யும் இடங்களைத் தேடிக் கண்டுபிடித்து போதைப் பொருட்களைக் கைப்பற்றுவதுடன்.

குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தவும் பொலிஸாருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது; (உ)

# அமைச்சர் மிலிந்தவின் கூற்றுக்கு ஜே. வி. பி. கடும் கண்டனம்

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொரக்கொடசென்னை 'பிஸ்நெஸ்லைன்' ரஜீத பகதீ என்பவருக்கு அளிதத பேட்டியில் சீனாவுக்கு ஹொங்கொங் இருப்பதுபோலஇந்தியாவுக்கு இலங்கையிருப்பதாகவும்,

உலகமயமாக்கல் தீவிரமாக முன்னெடுக்கப்படும் போது சிறிய தீவான இலங்கை தனித்து செயற்பட முடியாது என்றும் தெரிவித்திருக்கிறார்.

இக்கூற்றை ம.வி.மு. வன்மையாக கண்டித்துள்ளதுடன், ஹொங்கொங் சீனாவுக்கு சேவகம் செய்யும் நாடாக இருந்தது போன்று இலங்கையும் அடிவருடிவாழ்ற ஒரு நாடாகவேஇருக்கும் என்று அர்த்தம் இவரின் கூற்றில் தொனிக்கிறது.

எனவே அமைச்சர் மிலிந்தமொரக்கொட இதனை மீளப்பெறவேண்டும் என்று கோரியுள்ளது:

அவர் அமைச்சரென்றவகையில் இவ்வாறுகூறியிருப்பாராயின் அது இலங்கையை மீண்டும் இந்தியாவின் குடியேற்ற நாடாக ஆக்கிவிடும் முயற்சியாகும். இதனை ம.வி.மு. அனுமதிக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

### நத்தார் தினத்தன்று

# முன்னெப்போதும் இல்லாதவாறு கோஷ்டி மோதல்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

நத்தார்தின கோஷ்டி மோதல்களில் கடந்த வருடத்தைவிட இவ்வருடம் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொலிஸார் வெளியிட்ட அறிக்கையில் நேற்று முன்தினம் மட்டும் நாட்டின் தென்பகுதிகளில் ஏற்பட்ட கைகலப்புகள், மோதல்கள் போன்றவற்றால் 300 பேருக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை வடக்கில் நிகழ்ந்த கோஷ்டி மோதல் ஒன்றின் போது இளைஞர் ஒருவர் கத்திக்குத்திற்குமபலியாகியுள்ளார் என்றுகளுத்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்: (உ-7)

## மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் மாதாந்த மற்றும் வருடஇறுதிப் பொதுக் கூட்டம் எதிர் வரும் 31 ஆம் திகதி திங்கட் கிழமைகாலை 9.30 மணிக்கு மாநகரசபையின் கேட்போர் கூடத்தில் நடை பெறவுள்ளது. (உ-9)

### விமான நிலையத்தில்

# தீ விபத்து; பயணிகள் எவருக்கும் தீங்கில்லை

(டோக்கியோ)

டோக்கியோவிமான நிலையத்தில் இடம்பெற்ற தீவிபத்தில் விமானநிலையப்பணிகள் அரைமணிநேரம் செயலிழந்தன:

நேற்றுமுன்தினம், திடீரென ஏற்பட்ட இத்தீ விபத்தில் எதுவித உயிர்ச்சேதமும் ஏற்படாத போதிலும், பயணிகள் முண்டியடித்து வெளியில் செல்ல முற்படுகையில் 4 பேர் சிறு சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்பட வில்லையாயினும் மின் ஒழுக்கே காரணம் என தீயணைப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (உ-7)

## திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

ஆருத்திரா தரிசனத்தை முன்னிட்டு, எதிர்வரும் 30 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் நல்லூர்தேரடியில்அமைந்திருக்கும அறுபத்து மூன்று நாயனார் குருபூசை மடத்தில திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது.

[உ]

## இழப்புகள் குறித்து பதிவு

(மட்டக்களப்பு)

பெருநாளன்று சம்மாந்துறையில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவததில் பாதிப்புற்ற பொதுமக்கள் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடுகளைப் பதிந்து வருகின்றனர்;

சம்பவத்தில் காயப்பட்டவர்கள் மற்றும் பொருட்கள் சேதமானவர்கள் தமது இழப்புக்களை நேரடியாகப் பதிவு செய்ய பொலிஸ் நிலையத்தில் விசேட கருமபீடம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிறான் பெரேரா தெரிவித்துள்ளார்.

(உ)

## தேவகானம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்கக் கலை இலக்கிய வட்டத்தின் தேம்பாவணி இசைக்குழு வழங்கும் 'தேவகானம்' இசை ஒலிப்பேழை சி.டி. வெளியீடு இன்று மாலை 3.30 மணிக்கு மறைக்கல்வி நடு நிலையத்தில் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத் தலைவர் துரை. ஆரோக்கியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-106)

## விடைத் தாள்கள் கொழும்புக்கு

(யாழ்ப்பாணம்)

நடைபெற்றுவரும் க.பொ.த. (சா/த) பரீட்சையின் ஒரு தொகுதி விடைத்தாள்கள் நேற்று விமான மூலம் யாழ்ப்குடா நாட்டில் இருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-19)

---

## சிந்தனைக்கு விருந்து

### இன்னும் பத்து வேண்டும்

ஐம்பதுலட் சங்கா சரண்மனைபோல் வீட்டுடனே
உர்புதல்வன் எஞ்சினியர்க் கேற்பீரோ?- சம்மதமோ?
என்றுதர கர்வினவ இன்னும்பத் தென்மகளுக்
கென்றுகேன் என்றார் இவர்.

-பழையவன்

### இந்தியாவுக்கு எதிராக
# அணுவாயுதங்களை பிரயோகித்தால் பாகிஸ்தான் அழிய நேரிடும்

(புதுடில்லி)

இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துமேயானால் அந் நாடு முற்றாக அழிக்கப்படும் என்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் ஜனாக் கிருஷ்ணமூர்த்தி எச்சரித்துள்ளார்.

புதுடில்லியில் தனியார் தொலைக் காட்சிக்குப் பேட்டியளிக்கையில், என்ன இருப்பினும் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா முதலில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தாதென்றும், அதேவேளை பாகிஸ்தான் இந்தியா மீது அணுவாயுதத்தைபிரயோகித்தால் இந்தியாபதிலடிகொடுக்கும் போது எந்த நாடும்தலையிடமுடியாதென்றும் தெரிவித்தார்.

இதேவேளை,

பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் இராணுவத்தைக்குவித்திருப்பதால், இந்தியாவும் எல்லைப் புறங்களில் பெருமளவு படைகளைக் குவிக்க வேண்டியிருக்கிறது என்று பாதுகாப்புஅமைச்சர்ஜோர்ச் பெர்ணாண்டஸ் தெரிவித்தார். (து)

### இந்தியப் பாராளுமன்றத் தாக்கிய
# தீவிரவாத அமைப்புகள் மீது நடவடிக்கைஎடுக்க முஷாரப் உறுதி

(இஸ்லாமபாத்)

இந்தியப் பாராளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தியதாகக் கருதப்படும் லக்ஷறி இதொய்பா மற்றும் ஜெய்ஷி முகமது ஆகிய இரண்டு தீவிரவாத அமைப்புக்களின் மீதும் நடவடிக்கை எடுக்கப் போவதாக பாகிஸ்தானிய ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு 5 நாள் விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் முஷாரப் அங்கு செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்திய நாடாளுமன்றத்தின் மீது இரண்டு தீவிரவாத அமைப்புக்களும் தாக்குதல் நடத்தியதாக இந்தியா ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போருக்கு பாகிஸ்தான் ஏற்கனவே ஒத்துழைப்பு வழங்கிவருகிறது எனவே அவ்விரண்டு தீவிரவாத அமைப்புக்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுப்பதாயின் அது இந்தியாவின் கைகளிலேயே தங்கியுள்ளதென்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-5)

# இந்தியாவிற்கு உதவ ரஷ்யா தயார்

(மஸ்கோ)

இந்திய நாடாளுமன்றம் தாக்கப்பட்டதை ரஷ்யா வன்மையாகக் கண்டித்துள்ளது.

தெற்காசிய அரசியல் நிலைகளை ஆராய்ந்து இந்தியாவுடன் ஒத்துழைக்கவும் ரஷ்யா முன்வந்துள்ளது;

மஸ்கோவில் இந்திய தூதுவர் கே. ரகுநாத்ரஷ்யதுணை வெளியுறவு அமைச்சர் அலெக்சாண்டரைச் சந்தித்து முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (து)

# இந்திய பாக்.எல்லையில் பரவலாக மோதல்கள்

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் இருநாட்டுப் படையினருக்கும் இடையே பரவலான மோதல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு காஷ்மீர் எல்லைப்பகுதியில் இருநாட்டுப் படையினருக்குமிடையே இடம்பெற்ற மோதலில் பரஸ்பரம் துப்பாக்கி வேட்டுக்களும் பீரங்கித்தாக்குதல்களும் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது;

இத்தாக்குதல்களில் தமது தரப்பில் இரண்டுபடையினர் உயிரிழந்ததாக இந்தியப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பாகிஸ்தான் தரப்பில் இரண்டுபொதுமக்கள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து பாகிஸ்தான் பகுதியிலிருந்து பொதுமக்கள் இடம்பெயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சமபவங்களை அடுத்து இந்திய பாகிஸ்தான் எல்லையில் மேலும் மோதல்கள் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது; (உ-5)

உலக தரிசனம்

# இந்திய-பாக். நெருக்கடி சார்க்கில் தீர்க்கலாம்

[புதுடில்லி]

அடுத்தமாதம் நடைபெறவுள்ள சார்க் உச்சிமாநாட்டின் மூலம் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயுள்ள நெருக்கடிகளைத் தவிர்த்து நெருங்கிய நட்புறவு நாடுகளாக அவைகளை மாற்றலாம் என்று நேபாள நிதியமைச்சர் ராம் ஹரன் மகத் தெரிவித்துள்ளார்.

சார்க் உச்சி மாநாடு தொடர்பாக அங்கத்துவ நாடுகளுக்கு அழைப்புவிடுத்த பின்னர், நேபாளத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர்கருத்துத் தெரிவிக்கையில், இருநாடுகளுக்கும் இடையே கடந்த காலங்களில் முறுகல் நிலை இருந்து வந்தது. இந்திய பாராளுமன்ற தாக்குதலுக்கு பாகிஸ்தான் ஆதரவு பெற்ற தீவிரவாதிகளே காரணம் என்று குற்றம் சாட்டியதை அடுத்து முறுகல் நிலை மேலும் இறுக்கமடைந்தது.

எனினும் சார்க் உச்சிமாநாட்டின் மூலம் பிராந்திய நாடுகளுக்கிடையிலான நெருக்கடி நிலைமைகளைத் தவிர்க்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்; (எ)

# இந்தியத் தூதுவர் திருப்பியழைக்கப்பட்டார்

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதுவர் வி.கேதம்பியா நேற்றைய தினம் இந்தியா வந்து சேர்ந்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தின் மீது பாகிஸ்தானின் ஆதரவுபெற்ற தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்து முதல் ராஜதந்திர நடவடிக்கையாகவே தனது பாகிஸ்தானிய தூதுவரை இந்தியா திருப்பி அழைத்துக் கொண்டுள்ளது. (உ-5)

# அல்கெய்டா அமைப்பின் முக்கியஸ்தர் கைது

(ஸ்ரீநகர்)

கர்கத்துல் முஜாகுதீன் அமைப்புத்தலைவரும் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்புபின்னல் வலையின் முக்கிய பயங்கரவாதியுமான றாஜ்கமால் ஐயூக் என்பவரை ஜம்முவில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தகைது தொடர்பான தகவலை ஜம்மு காவல்துறை இன்ஸ்பெகடர் குப்தா தெரிவித்தார்;

இந்தியாவில்கைதாகியுள்ள அல்கெய்டா அமைப்பின் இரண்டாவது நபர் இவராவார்.

இவர் பாகிஸ்தானில் மொய்ப்பூரைச் சேர்ந்தவா என்பதும் குறிப்பிடத்தக்கது; (து)

# லக்ஷறி இதொய்பாவின் துணைத் தலைவர் சுட்டுக்கொல்லப்பட்டார்

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீர் பாரமுல்லா மாவட்டத்தில் வைத்து லக்ஷறிஇதொய்பா உபதலைவர் கொலலப்பட்டுள்ளார்;

தகவல் ஒன்று கிடைத்ததையடுத்து இராணுவத்தினரும் அதிரடிப்படையினரும் தேடுதல் நடத்திய வேளை,

லகஷறிஇதொய்பாஅமைப்புத் துணைத்தலைவர் ஷைபுல்ல அப்துல்லாவும், அவரது சகபாடியும் சுட்டுக்கொல்லப்பட்டதாக இராணுவட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# காட்டுப்பகுதியில் செயற்பட்டுவந்த தீவிரவாதக் குழுமீது தாக்குதல்
## 500 இற்கும் அதிகமானோர் பலி

(புஜீம்புரா)

புருண்டியன் தலைநகருக்கு வடகிழக்குப் பகுதியிலுள்ள காட்டுப்பகுதியில் செயற்பட்டுவந்த தீவிரவாதஅமைப்பின்மீது அந்நாட்டு இராணுவம் நடத்திய தாக்குதலில் 500இற்கும் அதிகமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கென்ய காட்டுப்பகுதி தற்போது முற்றிலுமாக விடுவிக்கப்பட்டுள்ளதாக புருண்டியின் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் நடவடிக்கைகளில் தமது தரப்பில் 28 படையினர் கொல்லப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

### அரபாத் விவகாரம் சூடுபிடிப்பு
# இஸ். பிரதமர் ஷரோனுக்கு அரேபிய சமூகம் எதிர்ப்பு

(ஜெருசலேம்)

நத்தார் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்கு பலஸ்தீன ஜனாதிபதி பெத்தலகேமிற்கு சென்ற பொழுது இஸ்ரேலிய படையினர் அவரைத் தடுத்து நிறுத்தியமை தொடர்பாக சீனாவும்பிரான்சும் தமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

அத்துடன், அரபாத்தை பெத்தலகேமிற்குசெல்வதற்கு அனுமதிக்க வேண்டுமெனவும் அவை கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக இஸ்ரேல் அரசாங்கம் தனதுகாலிலேயேசுட்டுக்கொண்டுள்ளதென பாதுகாப்புத்துறை அதிகாரிஒருவர் தெரிவித்ததாக அந்நாட்டுப் பத்திரிகை ஒன்றுசெய்திவெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனின் இந்த நடவடிக்கை அரேபிய சமூகத்தின் எதிர்ப்பினை மட்டுமன்றிசர்வதேச ரீதியாகவும் அவருக்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்; (உ-5)

# லக்ஷறி இதொய்பாவின் வங்கிக்கணக்குமுடக்கம் வெறும் கண்துடைப்பு
## பாக்.மீது சாடல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் லக்ஷறிஇதொய்பா வின்வங்கிக்கணக்குகள் முடக்கப்பட்டது என்பது வெறும் கண்துடைப்பென்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தான், லக்ஷறி இதொய்பா போன்ற இயக்கங்களின் வங்கிக் கணக்கினை முடக்கிவைத்தது, அமெரிக்காவின் வற்புறுத்தலால் தான் என்றும் இதுதொடர்பில் வங்கிகள் இது வரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லையென்றும் அவதானிகள் தெரிவித்தனர்.

இதேவேளை தாங்கள் கணக்கு வைத்திருக்கும் எந்த வங்கியும்கணக்குகள் முடக்கப்பட்டு விட்டனவென்று அறிவிக்கவில்லையென்றுலக்ஷறிஇதொய்பா பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (து)

# செச்சினிய தீவிரவாத அமைப்பின் தலைவருக்குஆயுட்காலச் சிறை
## ரஷ்ய நீதிமன்றம் விதிப்பு

[மொஸ்கோ]

செச்சினியா தீவிரவாத அமைப்பின் தலைவரான சல்மான் ரதுஏவுக்கு ரஷ்ய நீதிமன்றம் ஒன்று ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்துள்ளது.

சென்ற ஆண்டு மார்ச் மாதம் கைது செய்யப்பட்ட இவர் ரஷ்யாவின் தேடப்படுவோர் பெயர்பட்டியலில் முதலிடத்தில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது;

கடந்த 5 வருடங்களுக்கு முன் ரஷ்யாவில் இவரது அமைப்பைச் சேர்ந்தோர் நடத்திய தாக்குதலில் 70 பேர் கொல்லப்பட்டிருந்தமை தொடர்பான வழக்கிலேயே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்ட ஏனைய உறுப்பினர்களுக்கு 8 முதல் 15 ஆண்டுகள் வரையான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது (து)

பொச்சாட்பார்க் (கு)இல்லை புகழ்மை அதுவுலகத் (து) எப்பால் நூலோர்க்குந் துணிவு

- குறள்

# வலம்புரி

## வான் புகழ் தந்த பேரறிஞர்

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் ஆதீனத்தின் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களுக்கு கேம்பிறிட்ஜ் நகரில் அமைந்துள்ள அனைத்துலக வரலாற்றாய்வாளர் நிறுவனம் பேரறிஞர் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

இருபத்தோராம் நூற்றாண்டின் தலைசிறந்த அறிஞர்களைப் பட்டியலிட்ட அந் நிறுவனம் உலகளாவிய ரீதியில் இரண்டாயிரம் பேரைத் தெரிவு செய்துள்ளது. அதில் பேராயர் கலாநிதி ஜெபநேசன் அவர்களும் ஒருவர் என்பதை அறியும்போது உவகைகொள்ளாத தமிழ் உள்ளங்கள் இருக்க முடியாது. பேராயர் அவர்களுக்கு பேரறிஞர்பட்டம் வழங்கப்பட்டதால தமிழ் அன்னை ஆனந்தக்களிப் படைகிறாள். தமிழ் மீது அளவற்றகாதல கொண்ட பேராயர் அவர்கள் எழுத்திலும் பேச்சிலும் தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டுள்ளார்.

கம்பனின் இராமாயணம் முதல் இளங்கோவின் சிலப்பதிகாரம் வரை ஆழ்ந்து அகன்று ஆராய்ந்தவர் பேராயர். அவரின் எழுத்துருவாக்கல் சமயக் கருத்துக்கள் மனிதநேயப் பணிகள் அவரின் பேரறிஞர் விருதுக்கு ஏதுவாக அமைந்துள்ளன. எண்ணியதை எண்ணியாங்குபேசும் திறன்படைத்த அவர் பிற சமயங்களுக்கு மேலாக தன் தாய் மொழியாம் தமிழ் மீது அபாரப்பற்றுக் கொண்டிருந்தார். அதன் காரணமாக சைவ சமயக் கருத்துக்களையும் - புராண இதிகாசங்களையும் கற்றுத் தேர்ந்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்த பேராயரின் சமூகப் பணிகள் இன - மத - மொழிகளுக்கு அப்பாற்பட்டது. இத்தகைய சால்புகளைத் தன்னகத்தே கொண்டிலங்கும்பேராயர்அருட்திரு கலாநிதி ஜெபநேசன் அடிகளாருக்கு பேரறிஞர் பட்டம் வழங்கிக் கௌரவிப்பதால் குறித்த நிறுவனம் பெருமை அடைந்துள்ளது. தக்காரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு பேரறிஞர் பட்டம் வழங்கப்பட்டதால் இந்தநாடும் தமிழ் மக்களும் ஆனந்தமடைகின்றனர். அவரின் பணியைப் போற்றுகின்றனர். அவரால் ஈழத்திருநாடு வான்புகழ் கொண்டு விளங்குகிறது.

# இலக்கியப் பங்களிப்பில் அழியாத புள்ளிகளும் இணைக்க வேண்டிய கோடுகளும்

யார் விரும்பினால்என்ன, விரும்பா விட்டால் என்ன, ஈழத்து இலக்கிய வரலாற்றில், ஐம்பதுகளில் தொழிற்பட்ட முற்போக்கு இலக்கியத்தின் வகிபாகம் இன்று மறுதலிக்கப் படமுடியாத ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாகியுள்ளது. அந்த வரலாற்றை எழுதுவதற்கான தரவுகள், பதிவுகள் நிறைய உள்ளன ஆனால் அவையெல்லாம் ஒருங்கு சேர்ந்து நோக்கப்பட வேண்டியது அவசியம்.

அப்படி நோக்கும் பொழுது அழியாத புள்ளிகளாக அமையும் சில இலக்கிய நிகழ்ச்சிகள் இன்னும்தான், சரியான, ஒழுங்கானமுறையில் இணைக்கப்பட்டு ஒருபூரணமான வடிவம் வரலாற்றுமாணவர் முன் நிறுத்தப்படவில்லை என்பது நன்கு புலனாகின்றது.

### வரலாற்றுப் பார்வை

முற்போக்குஇலக்கிய இயக்கத்தின்செயற்பாடுகளில் உடனிலையாகவும், எதிர் நிலையாகவும்சம்பந்தப்பட்ட பலர் இப்பொழுதுவாழ்ந்துகொண்டிருப்பதாலும், அவர்களிற் பலர் அப்பொழுது (அறுபதுகளில்) ஏற்பட்ட காயங்களையும், வடுக்களையும் இப்பொழுது, தடவி இன்புற்றும் ஆத்திரப்பட்டுக் கொண்டுமிருப்பதாலும் 1950–70க் கால ஈழத்திலக்கிய வரலாற்றை ஒரு வரலாற்றுச் சம்பவமாகப்பார்க்கும்மனநிலை பலருக்கு இன்னும் ஏற்படவில்லை.

ஆனால் அந்த வரலாற்றுப் பார்வை அவசியம். அப்படிப் பார்க்கும் பொழுது காய்தல் உவத்தலின்றிப் பார்க்கும் பொழுது -அந்த வரலாற்றுக்கான தகவல்களில் இன்னும் சில சேர்த்துக் கொளளப்பட வேண்டும் என்பது தெரிய வரும்.

முற்போக்கு இலக்கியத் தாக்கம் ஏற்படுத்திய இருதள நிலை இலக்கிய விவாதங்கள் மிகமிகமுக்கியமானவை.

ஒன்று:-பழமைபேண்வாதிகளுக்கும் புதுமைவாதிகளுக்கும் நடந்த ''மரபுப் போர்''

மற்றது:-''புதிய ''இலக்கியகாரரிடையே (சிறுகதை. நாவல், கவிதையாசிரியர்களுக்கிடையே)நிலவிய கருத்து முரண்பாடு. இது இலக்கியத்தின் சமூகப்பணி பற்றியதாக இருந்தது.

இவை இரண்டுமே முக்கியமானவை. ஏனெனில் இந்த இரண்டு விவாதங்களும் நிறைவுற்ற பின்னர் ஈழத்தில் ஏற்பட்ட தமிழ்ப்புலமை மாற்றங்கள் இவற்றினடியாக வந்தவையாகும்.

### மரபுப்போர்

அவற்றுள் மரபுப் போரின் வரலாறு பற்றி ஒரு சிறிது நோக்குவதேஇக்கட்டுரையின் குறிக்கோள்.

கொடுத்தன.

விவாதம் சூடெழுப்பி. மறுப்புக்களும், மறுப்புக்கு மறுப்புக்களும் வரத்தொடங்கின. பணடிதர் இளமுருக

'தண்ணீர்' கதையை மொழி பெயர்த்திருந்தேன்.

### இளங்கதிர் இதழ்

இந்த மரபுப் போராட்டம் படிப்படியாகப் பல்கலைக்

## இணைக்க வேண்டிய கோடுகளும்

முதலில் மரபுப் போரின்வரலாற்றுப் பின்புலத்தைத் தெளிவுபடுத்தல் வேண்டும். 'மரபுப் போராட்டம்' என்று பின்னர் பின்னோக்கி

னார் தாம் எழுதிய பதில்கள் எல்லாவற்றையும் பிரசுரிக்கவில்லை என்று கூறி அவற்றைத் தொகுத்து''செந்தமிழ் வழக்கு''என்ற நூலாகவெளி

கழகத் தமிழறிஞர்களிடையேயும் கருத்து நிலை வேறுபாட்டை ஏற்படுத்திற்று. பேராசிரியர் ஆ. சதாசிவம் மரபு பேண்வாதியாகவும், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன் பழமையும் புதுமையும் இணைதல் வேண்டுமென்பதைக் கூறுபவர்களாகவும் காணப்பட்டனர். இந்த விவாதத்தில்பேராசிரியர் செல்வநாயகம், பேராசிரியர் சதாசிவத்தின் நிலைப்பாட்டை ஆதரிக்கவில்லை ... அந்தக் காலப் பகுதியில வெளிவந்த இளங்கதிர் இதழ் ஒன்றில் மரபு பற்றிய ஒரு விவாதம் இடம் பெறுகிறது.

இந்தச் செயற்பாடுகளில் தில்லைநாதன் பங்கு முக்கியமானது.

தில்லைநாதனின் இந்த நிலைப்பாடு, அவர்இலக்கியம் பற்றிக் கொண்டிருந்த எண்ணத்துணிபின் வெளிப்பாடு ஆகும்.

தில்லைநாதனின் சிறப்பே அதுதான். அவர் எழுத வேண்டிய அளவுக்கும், எழுதக்கூடிய அளவுக்கும எழுதவில்லை. ஆனால் தான் சொல்லவேண்டுவனவற்றைத் திட்டவட்டமாகச் சொல்வார்.

பத்திரிகையாளர் தில்லைநாதன் பின்னர் வித்தியோதயப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளராகி, பின்னர் 1965 இல் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளரானார்.

இன்று, விபுலாநந்தர் முதல் கணபதிப்பிள்ளை வரை இருந்த ''தவிசில்'' பேராசிரியராகப் பொலிவுடன் நிறைகின்றார்.

''பரிதியின் மேலும் இந்தப் பால். நிலா மேலும்தானே உறுதிகள் கோடி செய்தோம், உன்மத்தராயிருந்தோம்'' □

**பேராசிரியர் தில்லை நாதனின் முக்கிய இலக்கியப் பங்களிப்புப் பற்றிய சிறு குறிப்பு**

கூறப்படும் இந்த இலக்கிய வரலாற்று சம்பவம் .1.12 1962 இல்'' தினகரனில்'' வெளிவந்த 'அசையாத குட்டை நீரல்லமரபு'' என்ற கட்டுரையுடன் தொடக்கம் பெற்றது. அது அக்காலத்து முக்கிய தமிழ்ப்புலமையாளர்களில் ஒருவரான பண்டிதர் சோ. இளமுருகனாருக்கு எதிராக எழுதப்பட்டது.

அந்தமுதற் கட்டுரையை எழுதிய திருப்தியும், மகிழ்ச்சி

யிட்டார்.

தில்லைநாதனுக்கு எதிராகப்''பெட்டிசங்கள்''எழுதப்பட்டன.

அந்த விவாதத்தைச் செம்மையாக நடத்துவதற்கெதிராகப்பலர் அணி திரண்டனர்.

அந்த எதிர்ப்புக்களினூடே தனது இலக்கியப் பணியைச் செம்மையாகச் செய்த பெருமை தில்லைநாதனைச் சாரும்.

**பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி**

யும் எனக்குஉண்டுஎனினும், அது எடுத்த விசுவரூபத்திற்கு நான் என்னைப் பொறுப்பாளியாகக் கொள்ளமுடியாது.

ஏனெனில், அந்த விடயம் பத்திரிகையில் ஒருமுக்கிய விவாதமாக்கப்பட்ட முறைமை முக்கியமானதாகும்.

எனது கட்டுரைக்கு இளமுருகனார் எழுதிய பதில், பல தமிழாய்வாளரை அந்தவிவாதத்தினுள்ளே கொண்டுவந்தது சொக்கன், பண்டிதர் வ. நடராஜன் எனப்பலர் அதிற் பங்குபற்றினர்.

அந்த விவாதம் தொடங்கியபொழுது கைலாசபதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்து விட்டார். சிவகுருநாதன் தினகரன்ஆசிரியராக இருந்தார், அப்பொழுது தில்லைநாதன் தான் விவரணம் பகுதி( Features )ப்பொறுப்பாசிரியராக இருந்தார்.

### செந்தமிழ் வழக்கு நூல்

தில்லைநாதன் இந்த விவாதத்திற் காட்டிய சிரத்தையும். விவாதத்தை வழி நடத்திய முறையுமே இந்த விவாதத்துக்குத் தேசிய நிலைப்பட்ட முக்கியத்துவத்தைக்

தில்லைநாதன் அதன் பின்னர் ''ஒப்சேர்வர்'' பத்திரிகைக்குத் தமிழ் விடயங்களைப் பற்றி எழுதுவதற்கான உதவி ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

1962-1963 ஆம் வருடங்களில் ஒப்சேர்வரில், ஈழத்துத் தமிழ் ஆக்க எழுத்தாளர்களின் சிறுகதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டன. இதனால் அக்காலத்தில் இலங்கையின் தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்ட வளர்ச்சியை ஆங்கில மொழி வாசகர்களும் அறிவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தினார். இந்த மொழி பெயர்ப்புப் பணியில் ஏ. ஜே. கனகரத்தினா முக்கியமானவர். நான் டானியலின்

## சாயி அருளமுதம்



ஒரு தெய்வத்தின் பெயரையே எப்பொழுதும் தியானிக்கும்படி நான் உங்களுக்குக் கூறுவேன். இறைவனின் மகோன்னதத்தை விளக்கும் எண்ணற்ற உருவங்களின் ஒரு பெயராக அது இருக்கலாம். அவ்வாறு தியானித்துவரின் நீங்கள் ஆதரிக்கும் அந்த இறைவனை எவ்வளவு தீவிரமாக உங்களுக்குள் காண்கிறீர்களோ அதேயளவுதீவிரத்துடன் பிறரிலும் கண்டு அதனால் உங்கள் உள்ளத்திலிருந்து வெறுப்பும் அசூசையும் வெளியேறிஅன்பு விரிவடையும் அதன் பின் நீங்கள் அன்பு அமைதி, ஆனந்தம் ஆகியவற்றின் திரட்டாக விளங்குவீர்கள்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## புலிகளுடன் தொடர்பாம் இராணுவ வீரர் கைது

(கொழும்பு)

வடமேல் மாகாணத்திலுள்ள இராணுவ முகாம் ஒன்றிலிருந்து விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தவரென்று கருதப்படும் இராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினராக சேர்ந்துள்ளாரென கிடைத்த தகவல்களின்படி இவரது நடமாட்டங்கள் அவதானிக்கப்பட்ட பின்னரே கைது நடைபெற்றதாகவும்,

இவர் மீது தெரிவிக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் உண்மையா என்பதை அறிவதற்கு விசாரணைகள் நடைபெறுவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிததன

(உ)

## யாழ்ப்பாணத்திலுள்ள ஊடகவியலாளர்களுக்கு விரைவில் அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கு தகவல்திணைக்களத்தின் ஊடாக மிக விரைவில் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்தில் பதிவு செய்துள்ளவர்களுக்கு ஒரு மாதத்தினுள் தகவல்திணைக்களத்தின் அடையாளஅட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதெனஅவர் உறுதியளித்துள்ளதாகவும் மேற்படிசங்கத்தலைவர் வே. தவச்செல்வன் தெரிவித்தார்

(உ-43)

### இந்து மாசமுத்திரத்தில் போர் மேகம்

# இந்தியா – பாகிஸ்தான் கடும் முறுகல்

# எந்நேரமும் யுத்தம் வெடிக்கலாம் !

## இரு தரப்புப் படைகளும் தயார் நிலையில்

(புது டில்லி)

**தென்னாசியாவின் முன்னணி வல்லரசுகளான இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே எந்நேரமும் யுத்தம் வெடிக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.**

**காஸ்மீர் விவகாரம் முதல் கார்க்கில் போர் வரை தமக்கிடையே இருநாடுகளும் வன்போக்குடன் நடந்து கொண்டதுடன் முறுகல் நிலை உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.**

இந் நிலைமையில் அண்மையில் இந்தியாவின் கோபத்தை சீண்டிப் பார்க்கும் வகையிலும். அதன் பலத்தை பரீட்சித்துப் பார்க்கும் முக மாகவும் பயங்கரவாதிகள் பாராளு மன்றக் கட்டடத்தினுள் புகுந்து தற்கொலைப் பாணியில் தாக்கு தலை நடத்தியுள்ளனர்.

இத தாக்குதல் இந்தியாவின் இறைமைக்கும் கௌரவத்திற்கும் ஏற்பட்ட இழுக்கென்று கருதி அதற்கு காரணமானவர்களுக்கு தக்க பதிலடி கொடுப்பதற்கு இந்தியா தயாராகி விட்டது என்று இந்திய அரசு கூறுரைத்துள்ளது.


இத்தாக்குதலை பாகிஸ்தானே [illegible] நடத்தியதென இந்தியா குற்றம்சாட்டியுள்ளது இத் தாக்கு தலுக்கு பதில்தாக்குதல் தொடுத்து இந்தியாவின் கௌரவத்தை பாது காக்க பாகிஸ்தானுக்கு எதிராக போர்ப்பிரகடனம் செய்ய வேண்டும் என்று வாஜ்பாய் அரசை இந்திரா காங்கிரஸ் கோரியுள்ளது.

காஸ்மீர் விவகாரம் மற்றும் கார்க்கில் போரில் ஈடுபட்ட பயங் கரவாதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் வழங்கி. ஆதரவளித்தமை போன்ற பல காரணங்களினால் இந்தியாவின் வெறுப்புக்கும் கோபத் திற்கும் பாகிஸ்தான் இலக்காகி யுள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப்பும் யுத்தத்திற்கு யுத்தம் மூலமே தீர்வு என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டவர். இந்தியா வின் நடவடிக்கையால் பாகிஸ்தான் சளைத்து விடாது என்ற நிலைமை யிலேயே பாகிஸ்தானும் உள்ளது

இரு நாடுகளும் இரு துருவத் தில் நின்றுகொண்டு போர் ஆயத்தங் களில் முனைப்புடன் ஈடுபடுவதால் எந்நேரமும் யுத்தம் வெடிக்கும் அபாயம் உருவாகியுள்ளது

இந்துமகா சமுத்திரத்தில் அமைந்துள்ள இரு நாடுகளும் போரில் ஆர்வம் காட்டி யுத்தத்தில் ஈடுபட்டால் பாரிய விளைவுகளை அவை சந்திக்கும் என அஞ்சப்படு கிறது (இ)



தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் மாவட்ட முன்னாள் செயலாளரும் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவருமான பொன்.மதிமுகராசாவின் மூன்றாவது ஆண்டு நினைவுதினம் நேற்று கூட்டணியின் யாழ் அலுவலகத்தில் நடை பெற்றபோது எடுக்கப்பட்ட படம். படத்தில் மதிமுகராசாவின் மகன்மார் விஜயகாந்,விஜயவர்மன் உட்பட ஆதரவாளர்களைக் காணலாம.

## இனப்பிரச்சினையை தீர்க்க உதவுமாறு மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பேன்

### பிரதமர் ரணிலிடம் சோனியா காந்தி உறுதி

(புது டில்லி)

இலங்கையில் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அனைத்து உதவிகளையும் இந்திய மத்திய அரசு செய்யும் என தான் எதிர் பார்ப்பதாக காங்கிரஸ் தலைவியும், எதிர்க்கட்சித் தலைவியுமான சோனி யாகாந்தி தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் அண்மையில் புதுடில்லி சென்றிருந்த போது எதிர்க்கட்சி தலைவி சோனியா காந்தியை சந்தித்திருந்தார். இச் சந்திப்பின் போது சோனியா காந்தி பிரதமர் ரணிலிடம் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்தில் உதவ வேண் டும் என்பதில் தாம் ஆர்வமாக இருப்பதாகவும், இனப் பிரச்சினைத் தீர்வுக்கான விடயத்தில் இந்திய மத்திய அரசு உதவும் வகையில் அழுத்தம் கொடுக்கப் போவதாகவும் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

இதே வேளை குடியரசுத் தலைவர் கே. ஆர். நாராயணனும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்கான உதவியை நாடி பிரதமர் ரணில் வந்திருப்பதை பாராட்டியதுடன் பிரச்சினைத் தீர்வுக் குரிய அனைத்து அம்சங்களையும் இந்தியா உதவும் எனவும் தெரிவித் துள்ளார். (வ)

**உள்ளூராட்சி**....வருடத் துக்கு ஒத்திவைத்துள்ளது.நாட்டிலுள்ள 258பிரதேச சபைகளுக்கும், 37நகர சபைகளுக்கும், மற்றும் 14மாநகர சபைகளுக்குமே இத்தேர்தல் நடாத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் கள் சுதந்திர தேர்தல் ஆணைக் குழுவின் பணிப்பிற்கமைவாகவே நடைபெற உள்ளன(வ).

**பனை**...

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக உடுப்பிட்டித் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட்டவர் என்பது இங்கு குறிப்பிடப்பிடத் தக்கது.

இதே வேளை தற்போது பனை அபிவிருத்திச் சபை தலைவராக பணியாற்றுவது தெரிந்ததே

### இளம் பெண்ணிடம் திருடன் கைவரிசை

வல்லை தொண்டமனாறு வீதியில் தனிமையில் நடந்து சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் நகைகளை அபகரிக்க முயன்ற திருடனின் முயற்சி அவ் வீதியால் வந்தவர்களால் முறிய டிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 5மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் பெண் ணின் நகைகளை பலவந்தமாக பறிக்க முற்பட்ட இளைஞன் வீதி யால் வந்தவர்களால் பிடிக்கப் பட்டு நையப்புடைக்கப்பட்டார். குடத்தனையை சேர்ந்த இவ் இளைஞன் பொலிஸில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளார். (இ)

## பிரச்சனைகளை ஆராய குழுக்கள் அமைக்கப்படும்

(கொழும்பு)

சிறுபான்மைத் தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறித்து ஆராய்வதற்குப் பல்வேறு குழுக்கள் அடுத்தவாரம் அமைக் கப்பட விருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

குடாக்கடலில் கடற்தொழி லாளர் மீன்பிடிப்பதற்கு விதிக்கப் பட்டுள்ள கட்டுப்பாடுகள் குறித்தும் ஆராய்வதற்கு ஒரு குழு நியமிக் கப்பட விருக்கின்றது.

பிறிமா மா விநியோகஸ்

நாளை "கெந்தல" கப்பலில் இருந்து இறக்கப்படும் மாவினை எமது ஸ்தாபனங்களில் கீழ்க்காணும் விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| மொத்த விலை | ரூ 19.15. |
| சில்லறை விலை | ரூ 19.50 |
| சொரி மா விலை | ரூ 19.75 |

வி. எஸ். பி. குறூப்,
275 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி -2653

வி. எஸ். பி. குறூப்,
99 -105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி -2150

(இரு இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்)

(4113)

ஓம்

மக்கள் வங்கி

காந்தியை சந்தித்திருந்தார். இச சந்திப்பின் போது சோனியா காந்தி தலைவர் கே. ஆர். நாராயணனும்

## இளம் பெண்ணிடம் திருடன் கைவரிசை

வல்லை தொண்டமனாறு வீதியில் தனிமையில் நடந்து சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் நகைகளை அபகரிக்க முயன்ற திருடனின் முயற்சி அவ் வீதியால் வந்தவர்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 5மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் பெண்ணின் நகைகளை பலவந்தமாக பறிக்க முற்பட்ட இளைஞன் வீதியால் வந்தவர்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார். குடத்தனையை சேர்ந்த இவ் இளைஞன் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (இ)

சபைகளுக்குமே இத்தேர்தல் நடாத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் சுதந்திர தேர்தல் ஆணைக் குழுவின் பணிப்பிற்கமைவாகவே நடைபெற உள்ளன(வ).

---

**பனை...**

தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக உடுப்பிட்டித் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே வேளை தற்போது பனை அபிவிருத்திச் சபை தலைவராக பணியாற்றுவது தெரிந்ததே

---

**கதிர்காமர்...**

இறங்கியுள்ளோம்.

இதன் ஒரு கட்டமாகவே வன்னிக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அனுப்பிவைப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் மார்ச் மாதத்திற்கு முன்பதாக அரசியற் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

முன்னைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மனிதாபிமான முறையில் பிரச்சினைகளை அணுகி அடித்தளத்துடன் பேச்சு வார்த்தை நடத்தாமையினாலேயே அது தோல்வியை தழுவிக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம் தொடர்பாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நிகழ்ச்சித்திட்ட மொன்றை முன்வைத்திருந் தார்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் இப்போது எமது பரி சீலனையில் உள்ளது. இது ஒரு சிறந்த நிகழ்ச்சித் திட்டமாகவே காணப்படுகின்றது. இத்திட்டத்தின்அடிப்படையில் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் ரணில் தெரிவித் துள்ளார். (வ)


# மக்கள் வங்கி

PEOPLES BANK

## அறிவித்தல்

வருட இறுதிக் கணக்குகளை முடிப்பதற்காக எதிர்வரும் 31-12-2001 திங்கட்கிழமை யாழ் மாவட்டத்தில் உள்ள எமது மக்கள் வங்கிக்கிளைகள் யாவும் காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரை மட்டுமே திறந்திருக்கும் என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்.

பிரதேசமுகாமையாளர்

(c3040)


## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் ஈழத்துச்சிதம்பர

முன்னாள் பிரதம சிவாச்சாரியார்

**கணபதீஸ்வரக் குருக்கள் மங்களேசுவரக் குருக்கள்**

அவர்கள்

இறைபதம் எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

காரைநகர்

மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை

(c3041)


மொத்த விலை ரூ 19.15.

சில்லறை விலை ரூ 19.50

சொரி மா விலை ரூ 19.75

**வி. எஸ். பி. குறூப்,**
275 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி -2653

**வி. எஸ். பி. குறூப்,**
99 -105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி -2150

(இரு இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்)

(4113)


ஓம்

**நல்லூர் சிவன் கோவில்**

ஸ்ரீ காமலாம்பிகா சமேத ஸ்ரீகைலாஸ நாத சுவாமி தேவஸ்தானம்

## தமிழகக் கலைஞர்களின் தவில் நாதஸ்வர இசைநிகழ்வு

28.12.2001 வெள்ளிக் கிழமை

அதிகாலை 5மணிமுதல் 7.30 வரை

கைலாஸவாகன உற்சவத்தில்

| **நாதஸ்வரம்** | **தவில்** |
|---|---|
| **மாம்பலம் K.K.S சிவா** | கலைமாமணி |
| **மாம்பலம் K.K.S நடராஜன்** | **திருப்புங்கூர் T.G.முத்துக்குமாரசாமி** |
| இசைஞானமணி | தவில் நாதமணி |
| **G.கோதண்டராமன்** | **தலையங்காடு N.R.இராமநாதன்** |

ஆகியோர் இசை நிகழ்வு நிகழ்த்துவார்கள்.

**29.12.2001 சனிக்கிழமை இரவு 2.00 மணிமுதல் 6.00 மணிவரை**
**ஆருத்ரா அபிஷேகத்தின்போது**

அளவையூர் நாதஸ்வர **கலாசூரி N.K.பத்மநாதன்**
அவர்களுடன் இணைந்து
**யாழ்மண்ணின் பிரபல தவில் நாதஸ்வர கலைஞர்களின்**
இசைநிகழ்வு இடம்பெறும்.

**தேவஸ்தானம்**

(4114)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2001ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.